<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி</u>

நாள்: 20.02.2026.அ.வ.எண். 81/2025. வா.சா.1. சுமதி, க/பெ. சண்முகம்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாய்மாமா முத்துசாமிக்கு வாரிசு சான்றிதழ் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

முத்துசாமியின் தாய், தகப்பனார் பெயர் என்ன என்றால் குமாரசாமி , பேச்சியம்மாள் ஆகும். குமாரசாமி , பேச்சியம்மாள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் நான் குழந்தையாக இருந்தபோதே இறந்துவிட்டார்கள். அவர்களின் இறப்பு சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்துசாமியின் மனைவி சரஸ்வதியின் வாரிசு சான்றிதழையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) எனது தாயார் கண்ணம்மாளின் வாரிசு சான்றிதழையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு தேவையான சங்கதிகளையும் அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.